DEPOSITION OF WITNESS

IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, UTHUKULI

| | | |
|---|---|---|
| Case number | : | **OS 198 of 2020** |
| Deposition of witness | : | **DW1** |
| Name | : | **பழனியம்மாள்** |
| Husband Name | : | **தங்கமுத்து கவுண்டர்** |
| Age | : | **67** |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 09.02.2026

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

5. வாதியின் விவசாய பூமிக்கு கிழபுறம் எனது பூமி உள்ளது என்றால் சரியல்ல. கிணற்றிற்கு வடபுறம் தடம் உள்ளது என்றால் அந்தத் தடத்தில் வீடு கட்டி விற்றுவிட்டார்கள். அவ்வாறு தடத்தை ஆக்கிரமித்துவிட்டதாக வாதியின் மீதோ அவரது தந்தை மீதோ இதுவரையில் ஏதேனும் உரிமையியல் வழக்கு தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை, காவல் நிலையத்தில் தான் புகார் கொடுப்போம். அவ்வாறு புகார் கொடுத்தோம் என்று காட்ட ஏதேனும் ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நான் சொல்வதுபோல் சம்பவம் எதுவும் நடைபெறாத காரணத்தினால்தான் எந்தவொரு புகார் நகலையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல.

6. எனது பூமிக்கு கிழமேல் தடம் மற்றும் தென்வடல் தடம் உள்ளது. தென் வடல் தடத்தில் கம்பம் உள்ளது. கிழமேல் தடத்தின் முன் பகுதியை விற்றுவிட்டார்கள். நீதிமன்றத்தில் இருந்து நீதிமன்ற ஆணையர் சொத்திற்கு வந்து அளவை செய்தார்களா என்றால் அவ்வாறு யாரும் வந்து அளக்கவில்லை. நான் 2012ல் அவினாசி சார்பு நீதிமன்றத்தில் மின்சார வாரியத்திற்கு எதிராக தாக்கல் செய்த வழக்கிலும், அவ்வாறு ஆக்கிரமிப்பு

இருப்பதாக கூறவில்லை என்றாலும், நீதிமன்ற ஆணையர் நியமிக்க எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றாலும் சரியல்ல.

7. நான் சார்பு நீதிமன்றத்தில் தாக்கல் செய்த வழக்கில் வாதியையோ, அவரது தந்தையையோ ஒரு தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரிதான். அந்த வழக்கில் நீதிமன்ற ஆணையர் மூலம் எனது இடம் அளவை செய்யப்பட்டதா என்றால் இல்லை. மேற்படி நான் தாக்கல் செய்த தாவாவை பொறுத்து எனது தந்தை கம்பம் அமைக்க தடையின்மை சான்று கொடுத்த காரணத்தினால் எங்கள் மீது காழ்புணர்ச்சி கொண்டு, கிளுவை வேலி அகற்றி கம்பி வேலி போடுவதில் இடையூறு செய்தோம் என்றால் சரியல்ல.

8. எங்களுக்கு பாத்தியப்பட்டதாக சொல்லப்படும் மொத்த பூமிக்கு வடபுறத்தில் நிறைய வீடுகள் கட்டி வசித்து வருகிறார்கள் என்றால் சரிதான். தற்போதும் கூட அதில் குடிநீர் குழாய் அமைப்பதற்கு நான் இடையூறு செய்துள்ளேன் என்றால் சரியல்ல. தற்போது என்னிடம் காட்டப்படுவது பாகசாசனத்திற்கு பின்பு நான் வாதியின் தந்தை பெயருக்கு இலவசம் மின்சாரம் பெயர் மாற்றம் செய்ய கொடுத்த தடையின்மை சான்று என்று சொன்னால் இல்லை. இலவச மின்சாரத்தை பொருத்தவரையில் வாதியின் பெயருக்கோ அல்லது அவர் தந்தையின் பெயருக்கு மாற்றம் செய்யப்பட்டது சம்பந்தமாக ஏதேனும் ஆட்சேபனை தெரிவித்துள்ளேனா என்றால் இல்லை.

9. இந்த வழக்கில் நீதிமன்ற ஆணையரை கொண்டு தாவா சொத்தை அளக்க முயன்ற போது நான் தடுத்ததால் போலீசார் உதவியுடன் அளக்க முயற்சி எடுக்கப்பட்டது என்றால் சரியல்ல. எனது பூமிக்கு அருகில் வாதிக்கு பூமி இல்லை. தற்போது என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் எனது

பூமிக்கு அருகே வாதியின் வீடு உள்ளது என்று தெளிவாக தெரிகிறது என்றால் சரியல்ல. நான் இந்த வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. ஏற்கனவே பதிவு செய்யப்பட்ட பாகசாசனத்தில் எனக்கு பூமி ஒதுக்கப்பட்ட பின்பு, நான் கூடுதலாக பூமி கேட்டது சட்டப்படி ஏற்றுக்கொள்ளக் கூடியது அல்ல என்றால் சரியல்ல.

10. நீதிமன்ற ஆணையர் தாக்கல் செய்த வரைபடத்தில் கிழமேல் தடம் மற்றும் தென்வடல் தடம் அளந்து காட்டப்பட்டுள்ளது என்றாலும், அதுபடி வாதிக்கு தீர்ப்பாக வேண்டியது என்று சொன்னால் சரியல்ல. வில்லங்க சான்றுபடி இன்று வரையில் எனது பூமிக்கு அட்டாச்மென்ட் ரைஸ் ஆகவில்லை என்றால் சரிதான். அவ்வாறு பூமி விடுவிக்காத காரணத்தினால் தான் இதுவரையில் எனது பெயருக்கு பட்டா பெற்று நான் வரி செலுத்தவில்லை என்று சொன்னால் சரியல்ல. வாதியின் தந்தை தடையின்மை சான்று கொடுத்ததால்தான் வாதியின் பூமியில் கம்பம் அமைத்து எனக்கு மின்சாரம் கொடுக்கப்பட்டது என்றால் சரியல்ல, எனது பெயருக்கு பட்டா இல்லாத காரணத்தினால் கூட்டு பட்டாதாரர்கள் கையொப்பம் கேட்டதின் பெயரில் வாதியின் தந்தை கையொப்பம் செய்தார், கம்பம் எனது பூமியில் தான் உள்ளது.

11. நான் சொல்வது போல் கம்பம் எனது பூமியில் எந்த திசையில் உள்ளது என்றால் காங்கேயம் ரோட்டில் இருந்து வருகிறது. எனது தடத்தில் டவர் லைன் போட்டு உள்ளார்கள் அதிலிருந்து பிரித்து எனது பூமிக்கு லைன் வருகிறது. மின் கம்பம் வாதியின் காட்டில்தான் உள்ளதா என்றால் தெரியாது. மின் கம்பியானது வாதியின் பூமிக்கு தெற்கு ஓரத்தில் வருகிறது என்றாலும் நான் வழக்கிற்காக மாற்றி சொல்கிறேன் என்றாலும் சரியல்ல.

**(வாதியின் தரப்பு வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது)**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியிடம் கையெழுத்து பெறப்பட்டது.

B DHARANEETHER

Digitally signed by B DHARANEETHER
Date: 2026.02.09 17:17:13 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி மற்றும் நீதித்துறை நடுவர்,
ஊத்துக்குளி.